பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகத்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு:
விலை ரூபா 5-00
Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
VALAMPURI

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி.
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(இ-1980)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 07 திங்கட்கிழமை 21-05-2001 தொலை பேசி: 3378 ஒலி: 153

## விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம் பற்றி ஆராய

# ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நேற்று அவசர உயர்மட்ட மாநாடு!

### அமைச்சர் டக்ளஸ் அவசரமாக அழைக்கப்பட்டார்

(நமது நிருபர்)

சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கி பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு **"தமிழீழ விடுதலைப் புலிகள்மீதான தடையை நீக்குவது"** தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா சிரேஷ்ட அமைச்சர்கள் அடங்கிய உயர்மட்ட மாநாடு ஒன்றை நேற்று அவசரமாக நடத்தியுள்ளார்-

ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவர உத்தேசித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையிலிருந்து தப்பிப் பிழைக்கும் வழிவகைகளை ஆராயவும், கூட்டப்பட்ட மாநாட்டில் அமைச்சர்கள் ஜீ. எல். பீரிஸ், லக்ஷ்மன் கதிர்காமர் ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு நீண்டகாலயுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதால்.விடுதலைப் புலிகள் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் மூலம்அரசுக்குவிடுத்துள்ள மூன்றுகோரிக்கைகளில் புலிகள் மீதான தடையைநீக்கவேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குஅரசு தள்ளப்பட்டுள்ளது.

மறுபுறத்தில் அரசின்இந்த இக்கட்டான சூழ்நிலைபற்றி

(8ம் பக்கம் பார்க்க)

## ஆயுதம் ஏற்றப்பட்ட லொறி கொழும்பில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கொழும்பு மாளிகாவத்தைப்பகுதியில் ஆயுதங்களுடன் தரித்து நின்ற லொறியொன்று பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

எம். ஐ குண்டுகள், நிலவெடிகள் மற்றும் துப்பாக்கிகள் போன்றவை லொறியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன மேற்படி லொறியை மாளிகாவத்தை கராச்சில வைத்து சோதனையிட்டபோது பொலிசார் ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை லொறிச் சாரதி தப்பிச் சென்று விட்டார். இது தொடர்பான விசாரணைகளை மருதானை பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (இ)

## ஜனாதிபதியின் அழைப்பில் டக்ளஸ் கொழும்பு விரைவு

[யாழ்ப்பாணம்]

வடக்குஅபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி சந்திரிக்காவின் அவசர அழைப்பை அடுத்து நேற்று பி.ப.2 30மணிக்கு கொழும்பு

[8ஆம் பக்கம் பார்க்க]

## தம்மீதான தடையை நீக்குமாறு புலிகள் கோருவது நியாயமானதே

### பொது அமைப்புகள் கருத்து

[கொழும்பு]

தமிழீழ விடுதலைப் புலிகள் தம் மீது அரசாங்கம் விதித்துள்ள தடையை நீக்கக் கோருவது நியாமானது அத்துடன் அது மிகவும் அவசியமானதுமாகும் மென்று தேசிய சமாதானப் பேரவை மக்கள் சமாதான முன்னணி மற்றும் அரசியல்யாப்பு மாற்ற பிரஜைகள் முன்னணி உட்பட பல சமாதான அமைப்புக்களும் இராஜதந்திரிகளும்கருத்து வெளியிட்டுள்ளனர்.

தீர்க்கமான சமாதானப் பேச்சில் ஏற்படும் இருதரப்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ்.மாநகர சபையின் குடும்பநல சேவையாளர் பகிரங்க வேண்டுகோள்

[யாழ்பாணம்]

யாழ். மாநகர சபையின் குடும்பநல சேவையாளர்கள் நேற்று மாநகர சபையின் முதல்வர்பிரதிமுதல்வர் மற்றும் உறுப்பினர்களுக்கு அறிக்கை ஒன்றின் மூலம் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்

[8ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில்

## வவுனியாவில்
# புளொட் உறுப்பினர் இருவர் வாளால் வெட்டப்பட்டனர்

(வவுனியா)

வவுனியா முதலியார் குளம் பகுதியில் புளொட் உறுப்பினர்கள் இருவர் வாள் வெட்டுக்கிலக்காகி வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்

நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த வாள் வெட்

[8ஆம் பக்கம் பார்க்க]

# சமாதானம் ஏற்படும் வரை படையினர் போரிட வேண்டும்

## பிரதமர் ரட்ணசிறி வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கைப்படையினரின் நலன்களைப் பாதுகாப்பதற்குமுழுநாடும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கநேற்றுவேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

பனாகொடை சிறிபோதி விகாரைவளவில் கணனிப் பயிற்சி நிலையம் ஒன்றை நேற்று ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே பிரதமர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்,

பிரதமர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

யுத்த நடவடிக்கையின் போது படையினர் திறம்பட செயலாற்றவேண்டும்; நாட்

[8ஆம் பக்கம் பார்க்க]

# சமாதானத்தை எதிர்க்கும் தேரருக்கு அகிம்சை வழி எதுவெனத் தெரியாது

## தூதுவர் மங்களமுனசிங்க உரை

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் இலங்கையர்கள்தான் அவர்களுடன்பேசுவதன்மூலம் நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியுமென்று நான் நம்புகிறேன்

இவ்வாறு பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதுவர் மங்களமுனசிங்க தெரிவித்துள்ளார்:

இலங்கை மாணவர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே தூதுவர் மங்களமுனசிங்க மேற்கண்டவாறு தெரிவித்திருந்

[8ஆம் பக்கம் பார்க்க]

## அரசுக்கு எதிராக
# ஐக்கியதேசியக் கட்சி கொண்டுவரும் நம்பிக்கையில்லா பிரேரணையை புலிகள் ஆதரிப்பர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் மீது அரசியல் ரீதியாக கொடுக்கும் அழுத்தமாக ஐக்கிய தேசிய கட்சி கொண்டுவரும் அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்குவார்களென சர்வதேச செய்தி ஏஜென்சி ஒன்று நேற்றுத் தகவல் வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக முன்வைத்துள்ள மூன்று கோரிக்கைகளுக்கு அரசாங்கம் சாதகமான பதில் வழங்காதுவிடின், இருதரப்புப்

(8 ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## THE LATE MR K.POORANAMPILLAI A TRUE DISCIPLINARIAN

Mr. K. Pooranampillai who dedicated himself for the uplift of the society particularly in the region of Vadamaradchy, through his untiring service in the sphere of education at Hartley College, Point Pedro.

His gracious memories will instilled a fresh forever in the minds of everyone regardless of caste, creed or religion. Being a veteran teacher and an efficient administrator as well as a good disciplinarian the Hartley College and the replica of the lofty ideals of Mr. K. Pooranampillai are inseparable.

The late Mr. K. Pooranampillai was so concerned of the academic well being of the students that he kept his heart and mind as a receptacle filled with all back ground information of all students and their parents. He took keen interest in directing the students on the right track according to their aptitude and distinct abilities. He was reputed remarkably for his Visicn in forseeing the scope of his students and guiding them properly to fit into any surrounding of the society inorder to mould them into competitive citizens. He had the objective of producing students who were well versed with international affairs and thus he always emphasized on the proficiency of the English language, through which a broad volume of knowledge could be acquired.


He had the miraculous prophesy in the presently well known concept of globalisation and hence his reputed insistence of the idea of unification with regard to societal views leading to compromise and cooperation.

As a part of his administrative strategy he always targetted a small number of students (800 or so) to be admitted to the school so as to facilitate the upkeep of the management and subsequently to secure a significant academic output.

M. Nadarajasundaram.
President, PPA, Point Pedro,
Sri Lanka.

### ஹாட்லியின் சிற்பி

# அமரர் க. பூரணம்பிள்ளை அவர்களின் 30-ம் நாள் நினைவிதழ்



### அமரர் கணபதிப்பிள்ளை பூரணம்பிள்ளை அவர்களுக்கு செய்ய வேண்டியவை

மாணவன், ஆசிரியன், அதிபர், பழைய மாணவர் மன்றப் போஷகர் என்ற நான்கு முறைகளிலே ஹாட்லிச் சமுதாயத்தின் செழுமை மிகு எழுச்சிக்கு அயராது எண்ணிப் பணியாற்றியவர்.

தான் கையேற்ற ஹாட்லிச் சமுதாயத்துக்கான பணியை அர்ப்பணிப்பு, தியாகம் நேர்மை, விடா முயற்சி ஆகியன நன்கு செறிய உழைத்து ஹாட்லிச் சமுதாயத்தை சிறப்புற மேன்மை செய்தவர். அவர் ஆற்றிய பணியை நாம் அயராது தொடர்ந்தால் அது அவரது ஆன்மாவிற்கும், ஹாட்லிச் சமுதாயத்துக்கும் பொதுவாக மனுக்குலம் மாண்பு பெறுவதற்கும் வழி சமைக்கும்.

'ஒளியொருவற்குள்ள வெறுக்கை'

எம். சிறீபதி
அதிபர்
ஹாட்லிக் கல்லூரி

இருபதாம் நூற்றாண்டின் நடுவே ஹாட்லிக் கல்லூரியின் நவீன காலச் சிற்பியாக திரு. சி. பி தாமோதரம் அவர்களைத்தொடர்ந்துதிரு க பூரணம்பிள்ளை திகழ்ந்தார். அவரது குண நலன்கள், நிர்வாகத் திறமைகள் என்றும் நினைவு கூரத் தக்கவை. 91 ஆண்டுகள் வாழ்ந்து சுற்றிலும் பற்றுமிகு பாசத்தால் கல்லூரிக்கு தனது நூல்களை வழங்கியும் நிதியுதவி புரிந்தும் தனது கல்வித் தாய்க்குக் கடன் செலுத்தியவர். நாம் அவரை அதிபராய் மட்டும் பாராமல் மாணவனாயும் பார்த்தால் அவரது பற்றுள்ளம் மற்றெவரையும் விஞ்சி நிற்கும்;

### திரு. க. பூரணர்பிள்ளை = ஒழுங்கு, கட்டுப்பாடு

சீருடை தொடங்கி சகல செயற்பாடுகளிலும் மாணவரை ஒழுங்காகவும், கட்டுப்பாடாகவும் வைத்திருக்க வழி வகைகள் ஒழுங்கமைத்து வைக்கப்பட்டிருந்தன; சகலரும் சமன் என்ற கோட்பாட்டுக்காக விலை உயர்ந்த உடைகளோ வேறு அணிகலன்களோ கல்லூரி வளவினுள் அனுமதிக்கப்படவில்லை நீலக் காற் சட்டையும் வெள்ளைச் சட்டையும் தான். நேரம் தவறாமை ஹாட்லியின் தாரக மந்திரம். ஒரு நிகழ்வுக்கு குறித்த நேரத்தைவிட வெகு முன்னர் செல்வதையோ தாழ்த்திப் போவதையோ அனுமதிக்காத கடுமை அவரிடம் காணப்பட்டது அது கல்லூரிச் சமூகத்தில் ஆழப் பதிக்கப்பட்டிருந்தது. அதனை இன்றும் ஹாட்லியில் காண முடியும்.

### திரு. கே. பி. = நேர்மை, நியாயம்

அவரது காலத்தில் கல்லூரிச் செயற்பாட்டில் பாகுபாடு, பாரபட்சம், சலுகைகள் காட்டப்பட்டதாக சுவர்களில் எழுத்தோ மறைவான கடிதங்களோ வேறெதுவுமோ நடந்ததாக தெரியவரவில்லை. ஒவ்வொரு நடவடிக்கையிலும் மிக நிதானமாகவும் அவதானமாகவும், நேரடிக் கண்காணிப்பிலும் செயற்பட்டவர் மற்றவரைக் குறை சொன்னதும் இல்லை குறை கேட்டதும் இல்லையென்றே சொல்லலாம்;

### அழகு, கம்பீரம்

நிமிர்ந்த நன்னடையும் நேர் கொண்ட பார்வையும் அவரது அதிபர் பதவிக்கு அணிகலன் செய்தன. யாருக்கும் எதற்கும் நேருக்கு நேர் முகம் கொடுத்து நடந்து மாணவர் ஆசிரியரை வழி நடத்தி கற்றல் கற்பித்தல் சிறப்புற மேலோங்க வகை செய்தவர் அழகு, கம்பீரம் என்ற இயற்கைக் கொடையோடு நல்ல வகையிலே உடை அணிந்து எப்பொழுதும் மிடுக்காக காணப்படுவார். தலையிலே தொப்பி கையிலே சிறிய தோல் பெட்டி அவரது தோற்றத்துக்கு மெருகூட்டி உத்தியோகத் தோரணையை மேலும் கடுமையாக்கிக் காட்டும் முகத்திலே சிரிப்பு பிரச்சினைகள் செவிமடுக்கின்ற முறை ஒரே அலாதி தான் அவரது மனிதாபிமானம் மனித நேயம் பலரை திருத்திச் செயற்பட வைத்தது.

### கல்வி விளையாட்டு

திரு. சி. பி தாமோதரம் காலத்தில் வளர்க்கப்பட்ட விளையாட்டுத்துறையை மங்க விடாமல் காப்பாற்றியதோடு கல்வித் தரத்தையும் மேல் தூக்க சகலமுயற்சிகளையும் மேற்கொண்டார்; ஆசிரியர்களைத் தெரிவு செய்வதில் மிகக் கரிசனை காட்டினார். யாழ். மாவட்டத்தின்சகல பகுதிகளுக்கும் சென்று கல்லூரித்தேவைகளுக்கேற்ப விசாரித்து ஆசிரியர்களைதேர்ந்தெடுத்து அழைத்து வந்தார். அப்படி வந்தவர்கள்விடுதியில் தங்கியும் மேலதிக நேரங்களில் தங்களை அர்ப்பணித்தும் உழைத்தமையால் அந்தஅறுவடையின் பயனை மாணவர்பெற பெற்றோர் மகிழ, அதிலே தானே தனது முயற்சிகளையிட்டு நிம்மதிப் பெரு மூச்சு விட்டுக்கொண்டார்.

### தூய்மை, வாய்மை

தனது 91 ஆண்டு கால வாழ்க்கையின் மாணவ, ஆசிரியர், அதிபர் பதவிஇன்னோரன்ன வற்றின் மூலம் பெரும்பகுதியை ஹாட்லியுடன் இணைத்துக்கொண்ட இப் பெருமகனார் தனது குடும்ப வாழ்க்கையிலே இரு பெண் செல்வங்களையும் ஒரே மகனையும் பெற்று நிறைந்து வாழ்ந்தார். அவரது வாழ்க்கைத் தூய்மை இறுதிவரை துணைவியரை அருகிலேயே இருக்க வைத்து முன்னர் தான் வாங்கிய காணித்துண்டொன்றையும் விளையாட்டு மைதானப் பெருக்கத்துக்கு மகள் மூலம் அன்பளிப்புச் செய்ய முற்பட்டவர்.

அவர் தம் ஆன்மா சாந்தியடைய இத்தனை சாதனைகளும் போதுமென்பதால் நாமும் இன்றைய நாளில் பிரார்த்தனை செய்வோம்.

ஞானம் மிளிர்க

ஹாட்லிக் கல்லூரி
பழையமாணவர் மன்றம்.

(இ-2012)

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

ந. மதியரத்தினம் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல-0902002338) தேசிய அடையாள அட்டை (இல-630682339V) தொழில் அடையாள அட்டை என்பன கோண்டாவிலுக்கும் யாழ்.மாநகரசபைக்குமிடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் 'வலம்புரி'க் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (3151)

## நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை அரசு தக்கவிதத்தில் தோற்கடிக்கும்

### அமைச்சர் மங்கள தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கா விடுதலைப்புலிகளின் அனுசரணையுடன் அரசுமீது கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அரசாங்கம் உரிய முறையில் தோற்கடிக்கும் என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுமீது ஐக்கிய தேசியக்கட்சி கொண்டுவர உத்தேசித்துள்ள நம்பிக்கை இல்லாப் பிரேரணை தொடர்பாக அமைச்சர் மங்கள சமரவீர மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனநாயக முறைப்படி மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ள அரசைக் கவிழ்ப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி முயற்சி எடுத்துவருகிறது.

இவ்விவகாரம் தொடர்பாக நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் தீர்வு காணும் நோக்கில் அரசு எடுத்துவரும் முயற்சிகளை முறியடிக்கவே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ரணில்விக்கிரமசிங்கா கொண்டுவர முயற்சிக்கிறார்.

ஸ்திர நிலையிலுள்ள இந்த அரசாங்கம் 2005 ஆம் ஆண்டு வரை பதவியில் இருந்தே தீரும்.

அரசைக் கவிழ்க்கும் ரணிலின் கனவு பலிக்காது என்றும் அமைச்சர் மங்கள சமரவீர மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளையில், நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவரும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டாலும் கூட பல்வேறு வகையிலான பிரச்சினைகளும் எதிர்நோக்கப்படுவதாக செய்தி ஏற்கனவே தெரிந்ததே. (க-6)

## 30 வது நாள் நினைவுக் கூட்டம்

(மந்திகை)

யாழ் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் முன்னை நாள் அதிபர் அமரர் க. பூரணம் பிள்ளையின் 30 வது நாள் நினைவு தினம். இன்றைய தினம் மேற்படி பாடசாலையில் பாடசாலைச் சமூகத்தினரால் நடத்தப்படவுள்ளது (உ-23

## மருந்து தெளிக்கும் பணி தீவிரம்

(செம்பியன்பற்று)

குடத்தனை மணற்காட்டுப் பகுதிகளில் உள்ள நீர் நிலைகள் மீது அப்பகுதி சுகாதாரப் பகுதி ஊழியர்களால் மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

மலேரியா நோயை தடுக்கும் முகமாகவே இப்பணி மேற்கொள்ளப்பட்டது. (க-42)

## மணற் காட்டில் திரைப்படங்கள்

[செம்பியன்பற்று]

மணற்காடு றோ.க.த.க. பாடசாலை மற்றும் குடத்தனை அ.த.க. பாடசாலைகளில் சுகாதாரம் சம்பந்தமான படங்கள் காண்பிக்கப்பட்டன

அன்றையதினம் 'சிறகுகள்' எனும் ஓர் உளவியல் படமும் காண்பிக்கப்பட்டது (க 42)

## வருடாந்த மஹோற்சவம்

(ஊர்காவற்றுறை)

வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதி பிள்ளையார் (முடிப் பிள்ளையார்) ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. (செ-75)

## வானொலி அறிவிப்பாளர் நேர்முகத் தேர்வு இன்று

(யாழ்ப்பாணம்)

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு -கிழக்கு தமிழ் விவகார அமைச்சின் ஏற்பாட்டிலான வானொலி அறிவிப்பாளர் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வு இன்று யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள அமைச்சு அலுவலகத்தில் ஆரம்பமாகவுள்ளது

இதன்படி இன்றைய தினம் பருத்தித்துறை, மருதங்கேணி, கரவெட்டி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்த விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ளது.

ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு குறித்த தினம் பின்னர் அறிவிக்கப்படும். (உ-10)

## பேருந்து சேவையை அதிகாலையில் ஆரம்பிக்க பொதுமக்கள் வலியுறுத்து

(ஊர்காவற்றுறை)

காரைநகரில இருந்து யாழ்ப்பாணத்திற்கான பேருந்து சேவையினை காலை 6.00 மணிக்கு ஆரம்பிக்கவேண்டியதன் அவசியம் குறித்துவலியுறுத்தப்பட்டுள்ளது.

வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் காரைநகர் டிப்போவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிய பஸ் சேவை தினமும் காலை 6.30 மணிக்கு இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

இதனால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் மற்றும் மாணவர்கள் கப்பலரிக்கெற் பெற வரும் பொதுமக்கள் எனப் பலரும் பாதிக்கப்படுவதாகவும் குறிப்பிட்ட நேரத்திற்குச் செல்ல முடியாதுஇருப்பதாகவும் தெரியவருகின்றது. (உ-75)

## நாளை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண தொழிற்துறை திணைக்கள ணிபபாளரினால் தொழிற் பயிற்சி கருத்தரங்கு ஒன்று யாழ்செயலகத்தில செவ்வாய் கிழமைமு ப 10.00மணிக்கு நடைபெறவுள்ளது

மேற்படிகருத்தரங்கில்கைத் தொழில் அபிவிருத்தி சபை தேசிய தொழிற் பயிற்சி அதிகாரசபை பனை அபிவிருத்தி அதிகாரசபை யாழ் தொழில் நுட்பக்கல்லூரி வணிக தொழில் நுட்பநிறுவனம் தேசிய இளைஞர்மன்றம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம யு என் எச் சி ஆர், யு என் டி பி, செயார் பட்டினிக்கெதிரான நிறுவனம் ஆகியவற்றை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது (வ-15)

## ஸ்ரீ. ல. மு. காங்கிரசின் செயற் குழுக் கூட்டம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் செயற் குழுக் கூட்டம் நேற்றுகாலைக்9 30 மணியளவில் கொழும்பில் உள்ள அவர்களது அலுவலகத்தில் இடம்பெற்றது.

கட்சியின் தேசிய தலைவரும் அமைச்சருமான றவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் நாடெங்கிலுமுள்ள 350 செயற் குழு உறுப்பினர்கள் கலந்துகொணடனர்.

இக் கூட்டத்தில் கட்சிபற்றிய முக்கிய விடயங்கள் உட்பட நாட்டு நிலைமை மற்றும் அரசியல் நிலைப்பாடு குறித்து இம் மாநாட்டில் விசேடமாக ஆராயப்பட்டதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-7)

## விதவைகள் வாழ்வு மேம்பாட்டுத்திட்டம்

[ஊர்காவற்றுறை]

வேலணைப் பிரதேச சபையினால் அப்பகுதியில் வாழும் விதவைகளின் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

வறிய இளம் விதவைகள் இனங்காணப்பட்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த நடவடிக்கை எடுக்கும் வகையில் இவ் விபரங்கள் திரட்டப்படுவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த வகையில், வேலணைப் பிரதேசத்தில் உள்ள 16இளம் விதவைகளுக்கு தையல் இயந்திரம் வழங்கப்படவுள்ளன. (உ-75)

## இந்திய மீனவர் விடுதலைபற்றி சட்டமா அதிபரிடம் ஆலோசனை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் விடுதலை தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படவுள்ளது.

அண்மையில் இலங்கை கடல் எல்லையில் சட்டவிரோதமாக நுழைந்து மீன்பிடிக்க முயன்றவேளை, 40 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதும்,

இவர்களை இலங்கைக்கான இந்தியத்தூதுவர் இங்கு வந்து பார்வையிட்டுச் சென்றிருப்பதும் தெரிந்ததே.

மேற்படி மீனவர்கள் மீதான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## தமிழ்த்தின போட்டி துரித கதியில்

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான தமிழ்த்தினப்போட்டிக்கான முன்னோடி நடவடிக்கைகள் மேற்கொள்ளபடடுள்ளன இதன்படிபாடசாலைமட்டப் போட்டிகள் இம்மாதம் 25ந்திகதிக்கு முன்பாகவும் கோட்டமட்டப் போட்டிகள் எதிர்வரும் ஓராம் இரண்டாம்திகதிகளில் முறையே புத்தூர்சோமாஸ் கந்தாக்கல்லூரியிலும கோப்பாய்கிறிஸ்தவக்கல்லூரியிலும் நடைபெறவுள்ளதாக கோட்டக்கல்வி அதிகாரி கி·சிவஞானசுந்தரம் தெரிவித்துள்ளார். (உ-79)

## கள்வர் நடமாட்டத்தை கண்காணிக்க ஏற்பாடு

(ஈச்சமோட்டை)

சுண்டுக்குழிப் பகுதியில் கள்வர் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் தீவிர கண்காணிப்புப்பணியில் பாதுகாப்புப் பிரிவினர் ஈடுபட்டுள்ளதோடு, அதற்கு பொதுமக்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் நாடியுள்ளனர்.

அண்மைக் காலங்களில் அப்பகுதியில் இடம்பெற்ற திருட்டுக்கள், திருட்டுமுயற்சிகள் குறித்து பொதுமக்கள பாதுகாப்புப் பிரிவினரிடம் முறையிட்டதற்கிணங்க இச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, திருட்டுப் பொருட்கள் சில மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (உ-59)

## காணாமற் போனோர் விசாரணைகள் இன்று முதல் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

1996, 1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் இருந்து காணாமற் போனோர் தொடர்பான குற்றத்தடுப்பு பிரிவினரின் விசாரணைகள் மீண்டும் இன்றுமுதல் ஆரம்பமாகவுள்ளன.

கடந்த 2 வாரகாலமாக இங்கு தங்கியிருந்து காணாமற்போன 250 பேர் தொடர்பான விசாரணைகளை நடத்தி சாட்சியங்களைப் பதிவுசெய்த ஐ. பி. விக்கிரம ரத்தினபண்டார தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் கொழும்பு சென்றதையடுத்து,

நேற்றைய தினம் யாழ். வந்து சேர்ந்துள்ள எஸ். ஐ. கொடித்துவக்கு தலைமையிலான 9 பேர் கொண்ட விசேட புலனாய்வுத்துறையினர் இன்றுமுதல் விசாரணைகளைத் தொடங்கவுள்ளனர். (உ-10)

## தே. அ. அ. பணிகள் மேலும் 2 தினங்கள் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் குறை நிவர்த்திச் சேவையில் இடம்பெற்றுவந்த தேசிய அடையாள அட்டை பெறுவது, விண்ணப்பிப்பது, மீளாக்கம் செய்வது தொடர்பான பணிகள் இரு தினங்களால் நீடிக்கப்பட்டுள்ளன.

சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெறற மக்கள் குறை நிவர்த்திச் சேவையின் போது மாத்திரமே தேசிய அடையாள அட்டை தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்ப்பளிப்பதென முன்பு திட்டமிடப்பட்டிருந்த போதிலும்,

மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இன்றும் நாளையும் யாழ். செயலகத்தில் வைத்து இச்சேவையினை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## ஆலயம் புனருத்தாரனம்

(செம்பியன்பற்று)

குடத்தனை மாமிகைத்திடல் கண்ணகைஅம்மன் ஆலயம் புனருத்தாரனம் செய்யப்பட்டுள்ளது.

இது பலவருடங்களாகவும் புனர் நிர்மாணப் பணிகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதும்குறிப்பிடத்தக்கது. [க-42]

## உல்லாசப் பயணிகள் மாட்டு வண்டிச் சவாரி

(கொழும்பு)

கண்டி பேராதனை இயற்கை தாவரவியல் பூங்காவிற்குச் செல்லும் உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் மாட்டுவண்டியில் சென்று பூங்காவைப் பார்வையிடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முன்னைய காலங்களில் வாகனங்களில் சென்று பூங்காவைப் பார்வையிட அனுமதி அளிக்கப்பட்டிருந்த போதிலும் அது இயற்கைச் சமநிலைக்கு ஊறு விளைவிப்பதாகச் சுட்டிக்காட்டி நிறுத்தப்பட்டது.

இதன் காரணமாக உல்லாசப் பயணிகள் நடந்து சென்று பூங்காவைப் பார்வையிடும் சிரமத்தைக் குறைப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாய் பூங்கா நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (உ)

# எதிர்மறையான எண்ணங்களைஎண்ணும்போது மனிதமனத்தின் ஆற்றல் குறைவடைகிறது

## உளவலுவூட்டல் கருத்தரங்கில் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

எதிர் மறையான எண்ணங்களை எண்ணும்போது மனிதனின் சிந்திக்கும் ஆற்றல், மன வலிமை யாவும் படிப்படியாகக் குறைவடைகின்றன. மாறாக ஆக்க பூர்வமான எண்ணங்களை எண்ணும் போது மனித மனம் வலுவடைகிறது, செழுமையடைகிறது

மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் தெல்லிப்பழை யூனியன்கல்லூரிமண்டபத்தில் வலிகாமம் வலய தெல்லிப்பழை கோட்ட உதவி கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற உளவலுவூட்டல்கருத்தரங்கில் தொடக்க உரையாற்றிய அருட்தந்தை டேமியன் அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் பெருமளவில் கலந்து கொண்ட இந் நிகழ்வில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முன்னாள் அதிபரும் கவிஞருமான சோ. பத்மநாதன், மற்றும் சுகவாழ்வு நிலைய பிரமுகர்கள் கலந்து கொண்ட இந் நிகழ்வில் அருட் தந்தை மேலும் தெரிவிக்கையில்;

**மனத்தின் ஆற்றல்**

மனிதனுடைய மனத்தில் ஆற்றல்அளவிடமுடியாதவை. ஆனால் இலங்கையில் நீண்ட காலமாகத் தொடரும் யுத்த அனர்த்தங்கள், இடம்பெயர்வுகள் மனித மனத்தை பலம் குன்றச் செய்து விட்டன.

சொத்து இழப்பு. உயிர் இழப்பு. உற்றார், உறவினர்களை பிரிந்த துயரம்போன்ற வேதனை தரும் நிகழ்வுகள், மனிதனின் அன்றாட அனுபவங்களாகி விட்ட இந்நிலையில் மனித மனத்தை வலுவூட்ட வேண்டியது அவசியமாகும்.

**தற்கொலை மரணங்கள்**

யாழ்ப்பாணத்தில் தற்கொலை மரணங்கள் வெகுவாக அதிகரித்து வருவது வேதனையுடன் நோக்கப்பட வேண்டிய ஒன்று. என்றபோதிலும் இச்செயற்பாட்டிற்கான காரணம் உளவலுவூட்டல் குறைவாக அல்லதுமுற்றிலும் இல்லாமையே காரணமாகும்.

கவிஞர் சோ. பத்மநாதன் தமது உரையில்; பொதுவாக மனிதனுக்கு இழப்புகள் ஏற்படும் தனது துன்ப உணர்வுகளை பிறருடன் பகிர்வது அவசியமாகும்.இந்தஉளவியல் தத்துவத்தை ஒட்டியே மரண வீடுகளில் ஒப்பாரி வைக்கும் வழக்கம் பாரம் பரியமாக தமிழரால் இன்னும் பின்பற்றப்பட்டு வருகிறது.

இது பற்றி தற்போது பலவாறாக விமர்சிக்கப்பட்டாலும்கூட துன்ப உணர்வுகளை பிறருடன் பகிர்வது நிச்சயம் அவசியமானது. அந்த வகையில் ஒப்பாரிப் பாடல் இலக்கிய அந்தஸ்தை பெறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

தெல்லிப்பழை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் தமது உரையில்; வளர்ந்து வரும் நமது சமுதாயம் ஆரோக்கியமானதாக அமையவேண்டுமானால் மாணவர் மத்தியில் நற்கருத்துக்கள் புகுத்தப்படல் அவசியமாகிறது. அந்தவகையில் மாணவர்களுடைய உளவலுவை அதிகரிக்கும் ஊடகமாக ஆசிரியர்களையே தெரிந்தெடுத்துள்ளோம்.

இத்தகைய உளவலுவூட்டல் பயிற்சியானது ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையிலான ஓர் அன்புப் பாலமாக நிச்சயம் விளங்கும்.

மாணவருடைய உளத்தாக்கங்களை புரிந்துணர்வு அடிப்படையில் விளங்கிகொண்டு அதற்கு தக்கவகையில், செயற்படும் வகையில் ஆசிரியர்களை மாற்றி அமைக்க இக்கருத்தரங்கு நிச்சயம் வழிவகுக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை என்றார்.

உளப்பாங்கை மெருகூட்டும் வகையிலான குழுப்பாடல், விளையாட்டு நிகழ்வுகள், ஓவியம் வரைதல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றதுடன் அது குறித்த விளக்கங்களும் நடத்தப்பட்டன. [க]

## வீதி திருத்தம் இல்லை

[செம்பியன்பற்று]

பருத்தித்துறை செம்பியன் பற்று வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாது இருப்பது குறித்து அப்பகுதி மக்கள் கடும்அதிருப்திதெரிவித்துள்ளனர்.

இவ்வீதி திருத்தத்திற்கென 1.6 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் கூட வெறுமனே கற்கள் பறிக்கப் பட்டும் எவ்வித செயற்பாடும் இன்றி இருப்பது குறித்து பெரும் கவலை தெரிவிக்கப் படுகிறது.

15 வருடகாலமாக இவ்வீதி திருத்தப்படாது உள்ளமை குறித்தும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. (உ-42)

## புனர் நிர்மாணம்

மணற்காடு புனித அந்தோனியார் ஆலய, புனர் நிர்மாணப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

இவ்வாலயத்தில் ஆனிமாதம் திரு நாள் திருப்பலி இடம் பெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (உ-42)

## இராசி பலன்

21-5-2001

(வைகாசி 7, திங்கள்)

திரயோதசி பகல் 10 09 வரை

அச்சுவினி ந.ப 11 55 வரை

இராகுகாலம் 7.22- 8.52

நல்லநேரம் 11.52- 1.22

சித்தம்.

**மேடம்**

பெரியோர் மதிப்பு, கற்பனை மிகுதி, நண்பர்கள் உதவி, முயற்சி கைகூடும்.

**இடபம்**

உஷ்ண வியாதி, காரிய தாமதம், பொருள் விரயம், அமைதிக் குறைவு.

**மிதுனம்**

குடும்ப சுகம், நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை, சௌரவம்.

**கடகம்**

பணியாளர் உதவி, காரிய நன்மை, இலட்சுமீகரம், தொழில் நன்மை,

**சிங்கம்**

அரச நன்மை, ஆன்றோர் ஆசி, உடல் சோர்வு, முயற்சி தாமதம்.

**கன்னி**

எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், வியாதி, போசன சுகம்.

**துலாம்**

விருந்துபசாரம், வாசன வசதி, சௌரவமான நிலை, அபூர்வசந்திப்பு.

**விருச்சிகம்**

சந்தோசமான சம்பவம், சத்துரு ஜெயம், நோய் குணமடைதல், தொழிலவிருத்தி.

**தனுசு**

அரச நன்மை, தாழ்வு நிலை, வியாபாரச் சிறப்பு, முயற்சி தாமதம்.

**மகரம்**

உறவினர் மனஸ்தாபம், பயணத் தளர்வு, காரிய தாமதம், உடல் வியாதி.

**கும்பம்**

சகோதரர் உதவி, முயற்சி, வெற்றி, வாக்குப் பலிதம் சந்தோசமான நிகழ்வு.

**மீனம்**

வீண் விவாதம்,காரியதாமதம், தனவிரயம், மாதர் நட்பு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## வாகனச்சாரதி விண்ணப்பங்கள் நிராகரிப்பு தகுதியின்மை காரணமாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் வாகனச்சாரதிப் பதவிக்கு விண்ணப்பித்த யாழ். மாவட்ட விண்ணப்பதாரிகள் 28 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

நாடு தழுவிய ரீதியில் சிறைச்சாலை வாகனச் சாரதிப்பதவிக்குரிய வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இதனடிப்படையில் யாழ்ப்பாணத்திலிருந்து விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் போதிய தகுதியின்மை காரணமாக நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (இ-06)

## தமிழக முதல்வருக்கு அமைச்சர்டக்ளஸ் வாழ்த்து

[யாழ்ப்பாணம்]

தமிழ்நாட்டில் புதிய முதலமைச்சர் செல்வி.ஜெயலலிதாவிற்கு வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அவ் வாழ்த்துச் செய்தியில் தங்களதுநேர்த்தியான தலைமையில் அ.இ.அ.தி.மு.கட்சி தமிழ் நாட்டு சட்ட சபைத் தேர்தலில் ஈட்டிய மாபெரும் வெற்றியை இட்டு இலங்கையில்உள்ள தமிழ்பேசும மக்கள் சார்பிலுமஅம்மக்களின்அமைச்சரென்ற வகையிலும்,எனது மகிழ்ச்சியினையும் வாழ்த்தினையும்தெரிவித்துக் கொள்கிறேன்.

தீர்க்கமான அரசியல் பார்வையுடைய தாங்கள் அண்மைக்காலத்தில் இலங்கையில் நிகழ்ந்துள்ள அரசியல் மாற்றத்தை அறிந்திருப்பீர்கள். கடந்த தேர்தலில அதிகூடிய பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்று கூட்டரசாங்கத்தில் அங்கம வகிக்கும் ஈ.பி.டி.பியினராகிய நாம், தங்களின் ஒத்துழைப்புடனும் ஆலோசனைகளுடனும், இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்குஎமது அமைச்சு ஊடாக ஆற்றக்கூடிய பணிகளை ஆற்ற விரும்புகின்றேன் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. [இ]

## மோட்டார் சைக்கிள் பிரிவு வீதிகளில் பயிற்சி

(ஈச்சமோட்டை)

இலங்கை இராணுவத்தின் விசேட தாக்குதல படை மோட்டார் சைக்கிள் பிரிவினர் கடந்த சனி,ஞாயிறு தினங்களில்யாழ் நகர்வீதிகளில்பயிற்சிநடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பயிற்சியில் ஈடுபடுவதைக் குறிக்கும் "எல்" அடையாளம் மோட்டார் சைக்கிள்களில் பொருத்தப்பட்டிருந்தது.

ஸ்ரான்லிவீதி.கஸ்தூரியார் வீதி ஆகியவற்றில் சன நடமாட்டம் மிகுந்த வேளையில் இப்பயிற்சி இடம் பெற்றமையை அவதானிக்க முடிந்தது.

இவ்வாறான பயிற்சிகள் வடமராட்சிப் பகுதியிலும் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது. [உ-59]

## பத்து நாட்களுள் கடவுச் சீட்டைப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

உரிய முறையில் ஆவணங்களை சமர்ப்பித்தால் 10 நாட்களுக்குப் பின் கடவுச் சீட்டு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் என குறை நிவர்த்தி சேவையில் கலந்து கொண்டு கடவுச் சீட்டு வழங்க வந்திருந்த உயர் அதிகாரிகள் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

மேலும் அவர்கள் தெரிவிக்கையில அடையாள அட்டைப் பிரதி பிறப்புச் சான்றிதழ் அவற்றில், சமாதான நீதிபதி, உறுதிப் படுத்திய ஆவணம், மூன்று நிழற்படப் பிரதிகள் என்டவற்றினையும் கொடுத்து எந்த நிலையிலான கடவுச் சீட்டு என்பதனை உறுதிப்படுத்தி அதற்கு ஏற்ப பணத்தினையும் இவற்றுடன் ஒப்படைத்தால் குறைந்தது 10 நாட்களுள் கடவுச்சீட்டு உங்கள் கையில் கிடைப்பதற்கு தாம் உறுதி செய்வதாகவும் அத்துடன் போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக சற்று தாமதம் அடையலாம் எனவும் அவர் விளக்கியுள்ளார்.

கடவுச் சீட்டினைப் புதுப்பிக்கும் நடவடிக்கையும் இச் சேவையில் இடம் பெற்றது. 10 வருடங்கள் சென்ற கடவுச் சீட்டுகள் கட்டாயம் புதுப்பிக்கப்பட வேண்டும் என்றும் மேலும் 5 வருடம் சென்ற கடவுச் சீட்டுகள் மீளாய்வு செய்து கொடுக்கப்படும் என்றும் ஒவ்வோர் வருடத்திற்கு ஏற்பவும் 100 ரூபா வீதம் இக் கட்டணம் அறவிடப்படும் எனவும் அவ் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (க-10)

## சிரமதானம்

(செம்பியன்பற்று)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் தெரிவான அபிவிருத்தித் தொண்டர்கள் அப்பிரதேசத்தின் அபிவிருத்தியை கருத்தில் கொண்டு சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் சென்றவாரம் குடத்தனை அ.த.க பாடசாலை மற்றும் அம்பன் அ.மி.த.க பாடசாலைகளில் சிரமதானத்தை மேற் கொண்டனர். (உ-42)

# மக்கள் உணவின்றி வாடிய இருண்டயுகம் மீண்டும் இலங்கையில் உருவாகியுள்ளது

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் 1970 தொடக்கம் 1977 ஆம் ஆண்டு வரையான ஆட்சியின் போது மக்கள் உணவின்றி வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அந்த இருண்ட யுகம் மீண்டும் உருவாகியுள்ளது என ரணில் விக்கிரமசிங்கதெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை கண்டியில் இடம்பெற்ற மாகாண சபை உறுப்பினர்களின் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்துள்ள போதும் அதற்கேற்ற நிவாரணம் எதுவும் வழங்கப் படவில்லை. அத்துடன் தண்ணீர், மின்சாரம், தொலைபேசி போன்றவற்றின் கட்டணங்கள் உயர்ந்துகொண்டே செல்கின்றன;

தற்போதுள்ள அரசு அதற்கான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை; நாடு படுபாதாளத்தை நோக்கிச் செல்கிறது என்று எடுத்துரைத்த ஐ.தே.க.வின் தலைவர் ரணில்விக்கிரமசிங்க இதனைமுடிவுக்கு கொண்டு வரும் வரையில் நடவடிக்கை மேற்கொள்வது அவசியம் என்றும் தெரிவித்தார்.

இதனைஐக்கியதேசியக்கட்சியால்மட்டுமேதீர்க்கமுடியுமென்றும் தெரிவித்தார். (க-03)

## இன்று ஒரு தகவல்

### முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்

ஒரு தனி மனிதனநோ அல்லது சமூகத்தினதோ வாழ்க்கையின்வெற்றிக்குஅத்திவாரமாக அமைவது முயற்சியே. இம் முயற்சி தனி மனிதமுயற்சியாகவோ அல்லது கூட்டு முயற்சியாகவோஇருக்கலாம். இதையொட்டியதாகவே இன்றைய இலங்கையின் புதிய கல்விச் சீர்திருத்தமும் அமைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது இங்கு அதிபர் ஆசிரியர், மாணவர், பெற்றோர் சமூக அமைப்புக்கள் என்பவற்றின் கூட்டு முயற்சியே மாணவனுடைய தனி மனித முயற்சிக்கு ஊன்று கோலாக அமைந்துள்ளது. கல்விச் சிந்தனையாளர் ஒருவரின் கற்க மறுப்பவன் வாழ மறுக்கின்றான், என்ற கூற்றுக்கமைவாகஇன்று 5-14 வயது வரையான மாணவர்கட்குக் கட்டாயக் கல்வி முன்வைக்கப்பட்டு இம் முயற்சியின் மூலம் அவர்கட்குவாழக் கற்றுக் கொடுப்பதற்காக அரசும் முயல்கின்றது: எனவே இங்கு முயற்சி என்னும் வஸ்து பெறுமானம் மிக்கதாக சித்தரிக்கப்படுகின்றது. இது எந்தளவுக்குத் தற்போது வெகுமதிக்கு வாய்ப்பளிக்கிறதுஎன்பதை உணர்த்த ஒரு கதை.

ஒருநாள் வகுப்பறையில் தமிழ்ப் பாட ஆசிரியர் மாணவர்களை கடற்கரை, தென்னை, பசு என்ற மூன்று தலைப்புக்களைக் கொடுத்து மூன்றையும் தயார் படுத்துமாறும் இரண்டு நாட்களின் பின் தன்னால் குறிப்பிடப்படும் ஒன்று பற்றிக் கட்டுரை எழுத வேண்டும்என்றும்குறிப்பிட்டார். எல்லா மாணவர்களும் தயாராகவிருக்க ஒரு மாணவன் தென்னை மரத்தைப்பற்றி மட்டுமே தயார்ப்படுத்தியிருந்தான். இவனுக்கு பசுவைப் பற்றி எழுதுமாறு கூறப்பட்டமையால் திகைத்த மாணவன் சற்று யோசித்துத் தானே ஒரு முடிவுக்கு வந்தான்,

மகிழ்ச்சிகரமாக அம்மாணவன்பாலன்ஒருபசுவை வளர்த்தான். அது மிக அழகானது எனத் தொடங்கி இப் பசுவை வீட்டுக்குப் பின்னுள்ள தென்னை மரத்திலே தினமும் இரவில் கட்டித் தீன் போடுவான், இத் தென்னை மரமானது கடற்கரையில் வளரும் எனத் தொடர்ந்து தென்னையைப் பற்றி எழுதி இத் தென்னைக்கு பசுவின் சாணம்நல்ல பசளையாகும். என முடித்தான்:

இதைப்பார்த்ததும் வியந்தார்ஆசிரியர்; தண்டனையை எதிர் பார்த்த மாணவனுக்குக் கிடைத்ததோ வெகுமதி அவனதுஅறிவு, சொல்லாட்சி, யுக்தி, எழுத்தாற்றல், நுட்பம், ஆளுமை என்பன ஆசிரியரைக் கவர்ந்தன, பாராட்டிய ஆசிரியர் நாசூக்காக மாணவரின்தவறையுணர்த்தி மகிழ்ச்சிகரமான கற்றலில் என்றும் முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பதைத் தெளிவு படுத்தினார்.

இன்றைய புதிய கல்விச் சீர்திருத்தத்தில் கற்றல் கற்பித்தலில் 'முயற்சி' என்ற பதத்திற்கு முன்னுரிமை வழங்கியுள்ளமையைக் கருத்தில் கொண்டு எல்லோரும் வாழக் கற்போம்,

மு. விக்னேஸ்வரன்
கோப்பாய்.

## வேலணைப் பிரதேசத்தில் அபி. தொண்டர்களுக்கு பயிற்சி நெறிகள்

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பிரதேசசெயலர்பிரிவில் தெரிவு செய்யப்பட்ட நூறு அபிவிருத்தித் தொண்டர்களுக்குவேலணையிலும்புங்குடுதீவிலும் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு பயிற்சி வழங்கப்படவுள்ளது.

புங்குடுதீவுறோமன்கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில், கட்டுமானத் தொழில் நுட்பம், மரத்தொழில் நுட்பம், வீட்டுப் பாவனைப்பொருள் உற்பத்தி, வலை பின்னுதல், நீர்வளத் தொழில் நுட்பம்ஆகியபயிற்சி நெறிகளும், வேலணையில் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க தொழில் நிலையத்தில், தும்பு உற்பத்தி பனம்பொருள்உற்பத்தி ஆகியபயிற்சி நெறிகளும் வழங்கப்படவுள்ளன.

இப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும் வரைக்கும் அபிவிருத்தித்தொண்டர்கள் பொது வேலைத்திட்டங்களில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (செ-75)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 500ரூபா ஊக்குவிப்புப்படி

### வேலணைப் பிர. சபைத் தலைவர் தெரிவிப்பு

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பிரதேச சபையின் கீழ்உள்ளபத்துமுன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புப் படியாக மாதாந்தம் ஐநூறு ரூபா வழங்கப்படவுள்ளதாக வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நயினாதீவு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளி, நயினாதீவு மத்திசனசமூகநிலைய முன்பள்ளி, நயினாதீவு நாவலர் சனசமூக நிலைய முன்பள்ளி, நயினாதீவு அம்பிகா சனசமூகநிலைய முன்பள்ளி, புங்குடுதீவு மடத்துவெளி சனசமூகநிலைய முன்பள்ளி, புங்குடுதீவுபாரதிசனசமூகநிலைய முன்பள்ளி, வேலணை துறையூர் ஐயனார் சனசமூகநிலைய முன்பள்ளி, வேலணைகண்ணபுரம் சனசமூக நிலைய முன்பள்ளி, வேலணை ஸ்ரீமுருகன் சனசமூகநிலைய முன்பள்ளி, அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் சனசமூக நிலைய முன்பள்ளி ஆகிய முன்பள்ளிகளுக்கே ஊக்குவிப்புப்படி வழங்கப்படஉள்ளது;

மேற்படி ஊக்குவிப்புப்படி வேலணைப் பிரதேச சபை நிதியில் இருந்தே வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (செ- 75)

## பெற்றோல் கையிருப்பில் இல்லை

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பகுதியிலும் பெற்றோலுக்குப் பெரும்தட்டுப்பாடு நிலவுகின்றது,

வேலணையில் உள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன முகவர் நிலையமாகிய வேலணை ப.நோ.கூ. சங்கத்தினூடாக கடந்த ஒரு வார காலமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெற்றோல் விநியோகம் இடம் பெற்று வந்த போதிலும், தற்போது கையிருப்பு தீர்ந்துவிட்டதால் பாவனையாளர்கள் ஏமாற்றத்தோடு திரும்புவதாக கூறப்படுகிறது; (உ-75)

## யாழ். மாவட்ட மினி சினிமா அரங்குகளில் மாணவர்களுக்கு அனுமதியில்லை

### சங்கக் கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

மினிசினிமாக்களை நாடி வரும் மாணவர்களை இனம் கண்டு அவர்களை உள்ளே அனுமதிப்பதில்லை என மினி சினிமா உரிமையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் மினி சினிமா உரிமையாளர் சங்க பொதுக் கூட்டம் இடம்பெற்றபோது. மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதுடன். வேறும் சில தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

பாலியலை மையமாகக் கொண்ட ஆபாசத் திரைப்படங்களை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் காண்பிக்கக் கூடாதுஎனவும்,

மீறுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுப்பது. பாடசாலைகள், [illegible] சாலைகள், கோவில்கள் [illegible] வற்றின் பொது நன்மை கருதியோ அல்லது நிதி சேரிப்பிற்கோ மினிசினிமா உபகரணங்களை வழங்குவது

சங்கத்தினால் வசூலிக்கப்படும் பணத்தை வசதி குறைந்த மினி சினிமாக்களுக்கு இலகு தவணைக் கட்டண அடிப்படையில் வழங்குவது உள்ளிட்ட தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

மேற்படி சங்கத்தின் நிர்வாகத்தெரிவுக் கூட்டம் ஜூன் மாதம் 5 ஆம் திகதி நடத்துவதெனவும் இக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. (உ)

## தொண்டராசிரியர் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

இராணுவக்கட்டுப்பாடற்ற முள்ளியவளையில் தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி, நேற்று ஆர்ப்பாட்டப்பேரணியொன்றை நடத்தியுள்ளனர்.

தண்ணீரூற்று நெடுங்கேணிச்சந்தியிலிருந்து ஒரு அணியும், முள்ளியவளை கங்கையம்மன் ஆலயத்திலிருந்து மற்றொரு அணியுமாக இரு அணிகள் ஏக காலத்தில் பேரணியாகப் புறப்பட்டு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரிமைதானத்தைச் சென்றடைந்தது. (ந)

## ஈராண்டுப் பயிற்சிநெறி

(கல்வயல்)

இலங்கையிலுள்ள யாழ்ப்பாணம், காலி, கொழும்பு, மட்டக்களப்பு, பதுளை, அநுராதபுரம், கண்டி, குருநாகல், மாத்தறை, திருகோணமலை, வவுனியா, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் அமைந்துள்ள விவசாயக் கல்லூரிகளுக்கு 2002/2004 கல்வி ஆண்டுக்கான ஈராண்டுப்பயிற்சிநெறிக்கு விவசாயத் திணைக்களத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (உ-111)

## பரீட்சை முடிவுகள் வெளியாகின

(கந்தர்மடம்)

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் 1ஆம், 2ஆம், 3ஆம் வருடப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

எச். என். டி. எம் 1ஆம்வருடத்தில் 3பேரும், 2ஆம வருடத்தில் 3பேரும், 3ஆம்வருடத்தில் 8பேரும் எச். என். டி. ஏ. 3ஆம்வருடத்தில் 52பேரும் (பகல்+ மாலை) சித்தியெய்தியுள்ளனர்; (வ- 37)

## மன்னார் அகதிமுகாம் சுற்றிவளைப்பு

(கொழும்பு)

மன்னார் பேசாலை அகதி முகாமை நேற்றுமுன்தினம் திடீரென சுற்றிவளைத்த இராணுவ அதிரடிப்படையினரும்பொலிசாரும் ஆறு இளைஞர்களை கைதுசெய்து விசாரணைக்காக பேசாலை இராணுவமுகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம்இராணுவ அதிரடிப்படையினரும்பொலிசாரும் கூட்டாக இணைந்து மேற்கொண்டசுற்றிவளைப்பு தடுதலின் போது அங்கிருந்தவர்களை வெளியே செல்ல விடாது அடையாள அட்டை மற்றும் வதிவிட சான்றிதழ்களையும் சோதனை யிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஆறு இளைஞர்களும் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் கைது தொடர்பாக ஆயர் இராயப்பு யோசெப் பிடமும் மன்னார் ரெலோ காரியாலயத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது; [இ]

## ஆசிரியர்களுக்கான புதிய சம்பளத் திட்டம் விரைவில் நடைமுறை

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கான புதிய சம்பளத்திட்டம் விரைவில் நடைமுறைக்கு வரவுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் அமுலுக்கு வரும் பட்சத்தில் நாடுதழுவிய ரீதியில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் நன்மையடைவார்கள் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ)

## மண் ஏற்றுவோர் அடாவடி அதிருப்தி நிலையில்மக்கள்

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் மண் ஏற்றிச் செல்வோர் அவ்வீதியால் செல்லும் அரச ஊழியர் மற்றும் பொது மக்கள் மீது அடாவடித்தனம் புரிவதாக அப் பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இப் பகுதியில் மண் ஏற்றிச் செல்வோர் தொகை வெகுவாக அதிகரித்து வருவதால் மண் வளம் அழிவடையக் கூடிய ஏது நிலை ஏற்படலா மென்றும் மேலும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (க-42)

## இடம்பெயர்ந்த மக்களின் குறைகளை கேட்டறிய நடவடிக்கை

(ஈச்சமோட்டை)

இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் வசிக்கும் புலோப்பளை, தம்பகாமம் பகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிய ஏற்பாடு செய்யப்பட்டுளளது.

ஆனைக்கோட்டைப் பகுதியில் இயங்கும் புலோப்பளை கிராம அலுவலர் வேதநாயகத்தின் அலுவலகத்தில் நாளைய தினம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இ ஐபாத்துரை கலந்து கொண்டு சம்பந்தப்பட்ட மக்களின் குறைகளைக் கேட்டறிவார்.

அன்றைய தினம் தம்பகாமம் பகுதி அபிவிருத்திச் சங்கத்திற்கு உட்பட்ட ஏழு பேருக்கு கடனுதவி வழங்கப்படவுள்ளதாகவும் சங்கத் தலைவர் எஸ் விஜயரூபன் தெரிவித்துள்ளார். (உ)

## சம்பள நிலுவையைப் பெற பரந்தன் ஊழியர் மறுப்பு

### அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஊழியர்கள் 142 பேர் கடந்த நான்கு மாதங்களின் சம்பள நிலுவையினைப் பெற்றுக் கொள்ள மறுப்புத் தெரிவிப்பதாக இரசாயனக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்துளளார்.

நேற்று முன் தினம் குறை நிவாரத்தி சேவையில் பங்கு பற்றிய அதிகாரியிடம் சென்று வினவிய போது இவர்களுக்கு 50%மான சம்பளமே கொடுக்கப்பட்டு வருவதாகவும் இதனைக் கூட்டித் தரும் பொருட்டே இவர்கள் இச் சம்பளத்தினைப் பெறுவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர் எனவும்இவ்விடயம் சம்பந்தமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுளளது எனவும இதற்கான முயற்சிகளை தாம எடுப்பதாகவும கூறியுளளார்.

மேலும இவ் இரசாயனக் கூட்டுததாபனத்தினை மீள புனரமைபபது தொடர்பாக அவரிடம் கேட்ட போது இக் கூட்டுத்தாபனம முற்றாகவே அழிககப்பட்டுளளது

இதனை மீளவும் கட்டி எழுப்புவத யின குறைந்தது 1000 மிலலியன தேவை எனவும் இவ் விடயம இப்போதைக்கு சாத்தியபபடும வாய்பபு இல்லை எனவும சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவிதது ளளார்.

மேலும இதனைப் புனரமைபபதாயின வெளிநாட்டு உதவியுடனே இது சாத்தியப்படும் எனவும தெரிவித்தார்; (க-10)

# இஸ்ரேலின் தொடர்பைத் துண்டிக்க அரபு நாடுகள் தீர்மானம்

இஸ்ரேஸ்லுடனான அரசியல் உறவைத்துண்டிக்கும்படி அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் அறிவித்துள்ளனர்.

பலஸ் தீனத்துக்குஎதிராக இஸ்ரேல் தொடுத்துள்ளதாக்குதல்களை நிறுத்தாத வரை அதனுடன் எவ்வித தொடர்பினையும் வைத்துக் கொள்ள வேண்டாமென்று கெய்ரோவில் நடை பெற்ற அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

பலஸ்தீன மேற்கு கரையோரமாக தாக்குதல்கள் தொடர்வதையடுத்தே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கிடையில் ரஷ்ய அதிபர் புட்டின் இஸ்ரேல் பிரதமருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பலஸ்தீனத்திற்கெதிரான தாக்குதலை உடனடியாக நிறுத்தும்படி கேட்டுக் கொண்டார். (து)

# தேர்தலில் நில்லாத சண்முகம் புதுச்சேரியின் முதல்வராகிறார்

தமிழகத்தைப்போல் தேர்தலில் போட்டியிடாத சண்முகம் பாண்டிச்சேரி யூனியன் பிரதேச முதல்வராகிறார்.

பாண்டிச்சேரியின்காங்கிரஸ் தலைவராக வருவதற்கு பலர் முன்வந்தபோதும் சோனியாகாந்தியின் தலையீட்டால் முன்னாள் முதல்வர் ப. சண்முகம் பாண்டிச்சேரிகாங்கிரஸ்கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதன் பேரில் யூனியன் பிரதேச முதல்வராகவும் அவர் பதவியேற்கிறார்.

ப. சண்முகம் முதல்வராக பதவியேற்ற பின்னும் ஆறு மாதத்துள் தேர்தலில் நின்று வெற்றி பெறவேண்டும் என்பது விதியாகும். (து)

# ஜம்மு வரும் கே. சி. பந்துடன் பேச்சு வார்த்தை நடத்துபவர் சமிதா

(ஸ்ரீநகர்)

ஜம்முகாஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இந்தியத்தரப்பில்பேச்சுவார்த்தைநடத்தும் கே சி.பந்துடன் தான் பேச்சு வார்த்தை நடத்த இருப்பதாக காஷ்மீர் ஜனநாயக உரிமைகள் கட்சித் தலைவர் சமிதா விருப்பந் தெரிவித்துள்ளார்.

சமிதா மேலும் தெரிவிக்கையில்;உலகெங்கும் உள்ள காஷ்மீர் முஸ்லிம் தலைவர்கள் தன்னுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் அவர்கள் யாவரும் இந்திய உயர் அதிகாரி கே. சி. பந்துடன் பேச்சு வார்த்தை நடத்த விருமபுகிறார்கள் என்றும் தெரிவிததார்.

அண்மையில் கே சி. பந்தும் முகாஷ்மீருக்குவரும்பொழுது தான் அவருடன் பேசுவேன் என்று ஜனநாயக உரிமைகள் கட்சித் தலைவர் சமிதா தெரிவித்தார். (து)

# உக்ரைன் நாட்டவர் 18 பேர்மீது அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

பல நூற்றுககணக்கான ஆட்களைக் கடத்தியமைக்காக உக்ரைன் நாட்டு பிரஜை 18 பேர் அமெரிக்காவினால் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

உக்ரைனில் இருந்து கடத்தப்பட்டவர்களில் பல பேர் பெண்கள் இவர்கள் மெக்ஸிக்கோவுக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து அமெரிக்காவுக்குள் கடத்தப்பட்டுள்ளனர்.

கடத்தப்படும் பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப் பட்டுவருகின்றனர். உக்ரெயினில் உள்ள பயணமுகவர் நிலையமே இக் கடத்தலை மேற்கொள்கிறது என்றும் அமெரிக்காவுக்குள் அழைத்துச் செல்ல 7 ஆயிரம் டொலரை அது அறவிடுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

# ஐ. ஆர். ஏ. அமைப்பு அமெரிக்கா தடை உத்தரவு

(வாஷிங்டன்)

வட அயர்லாந்தின் உண்மையான ஐ ஆர் ஏ போராளிகள் தாம் என கூறிவரும்ரியல் ஐ ஆர் ஏ தீவிரவாத அமைப்பை வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் அமெரிக்கா இணைத்துள்ளது.

இந்த அறிவிப்பினால், இவ் அமைப்பிற்கான நிதிசேகரிப்பு, அரசியலாதரவு, விசா வழங்குதல் என்பவற்றுக்கு தடைவிதிக்கப்பட்டதுடன் சொத்துக்களும் முடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ரியல் ஐ. ஆர். ஏ அமைப்பினர் பல பெயர்களில் இயங்கினாலும் அவர்கள் எல்லோரும் ஒரே அமைப்புக்குரியவர்கள் என்பதனால் இவர்களுக்கு அமெரிக்க நுழைவுச் சீட்டு மறுக்கப்படும் எனவும் தெரியவந்துள்ளது. (உ-3)

# பாரதீய ஜனதாக்கட்சிக்கு புதுப் பொலிவூட்டும் கூட்டம்

(புதுடில்லி)

பாரதீய ஜனதாக்கட்சிக்குப் புதுப்பொலிவூட்டும் கூட்டம் அண்மையில்நடக்கஇருக்கிறது.

உத்தராஞ்சல் மாநிலத்தில் மசூதி பகுதியில் நடைபெற இருக்கும் கூட்டம் கட்சியின் தலைவர் ஜனா கிருஷ்ண மூர்த்தி தலைமையில் நடைபெறஇருக்கிறது.

நடந்துமுடிந்த ஐந்து மாநிலத் தேர்தல்களில் பாரதிய ஜனதாக்கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் தோல்வியடைந்துள்ளமையையிட்டு ஆராய இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த ஆண்டு நடக்க இருக்கும் உத்திரப் பிரதேச மாநிலத் தேர்தலில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்றும் வெற்றி அடைவதற்குரிய வழிகளை வகுப்பதற்காகவும் இக்கூட்டம் வழி செய்யும்என்று தெரிவிக்கப் படுகிறது.

இந்தப் புத்தூக்கக் கூட்டத்தில் கட்சிவளர்ச்சிக்கு தொண்டர்களாக ஈடுபடுத்துவது பற்றியும் தீர்மானங்கள் எடுக்க இருக்கின்றன. இளைஞர் அணியில்ஆர் எஸ். எஸ். அமைப்பை மீண்டும் ஈடுபட விடுவது பற்றியும் ஆராயப்படும். (து)

## நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்திற்கு அமெரிக்கா அழைப்பு

[வாஷிங்டன்]

நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்திற்கு இஸ்ரேலும் பலஸ்தீனமும் முன்வர வேண்டும் என்று அமெரிக்கா கேட்டுள்ளது

இந்த இருநாடுகளின் யுத்த நிறுத்தத்திற்கும் மத்திய கிழக்கு நாடுகள் அத்தனையும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் இஸ்ரேல் விமானங்கள் தாக்கி, இருபதுக்கு மேற்பட்ட பலஸ்தீனர்கள் பலியானதை சுட்டிக் காட்டிய அமெரிக்கா இது போன்ற சம்பவங்களால் மக்கள் வீணாக உயிர் விடுவதை தடுப்பதற்கு இருநாடுகளும் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்திற்கு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டது. [து]

## பஸ் குண்டு வெடிப்பு முப்பது பேர் பலியாகினர்

சோமாலிய வெடி விபத்தொன்றில் முப்பது பயணிகள் பலியாகியுள்ளனர்.

பயணிகள் நிறைந்த பஸ் வண்டியொன்றில் ஒரு பயணி மறைத்துக் கொண்டு வந்த வெடி மருந்து வெடித்சதில் பஸ் தீப்பற்றிக்கொண்டது.

தீயிலிருந்து பஸ் சாரதியும் சில பயணிகளும்யன்னலூடாகப் பாய்ந்து தப்பியதாகவும் முப்பது பேர் இறந்தனரென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## ஜனநாயகக் கூட்டிலிருந்து சமதாக்கட்சி விலகுமா?

(புதுடில்லி)

மத்தியிலுள்ள தேசிய ஜனநாயகக்கூட்டணியில் பங்கேற்பது பற்றி மறு பரிசீலனை செய்யப்போவதாக ஜோர்ச் பெர்னாண்டஸ் தலைமையிலான சமதாக்கட்சி அறிவித்துள்ளது.

இதுபற்றி ஆராய்ந்து முடிவெடுப்பதற்காகச் சமதாக் கட்சி இன்று கூடுகிறது.

மறுபரிசீலனை செய்வதற்கான காரணங்கள் கூறப் படாத்போதும், மணிப்பூரில் சமதாக்கட்சியில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலைக்கு பாரதிய ஜனதா தான் காரணமென்று கருதுவதால் மணிப்பூரில் சமதாக்கட்சி ஆட்சி கவிழத்தாம் விடமாட்டோம் என்று பாரதிய ஜனதாக் கட்சித்தலைவர் ஜனாக் கிருஷ்ண மூர்த்தி தெரிவித்தார். (து)

## 16பேருக்குமரண தண்டனை

(பீக்கிங்)

சீனாவில் கடந்த 9 வருடகாலமாக இயங்கி வந்த கொள்ளைக் கும்பல்ஒன்றைச் சேர்ந்த 16 பேருக்கு நேற்றைய தினம் அங்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

ஜாம் சூங் என்பவர் தலைமையில் இயங்கிவந்தமேற்படி கொள்ளைக் கும்பல் கடந்த 9 வருடங்களில் 28 படுகொலையும் 22 பெரும் கொள்ளைகளையும் நடாத்தி 6 கோடி 50 இலட்சம் டொலர் பணத்தினை தம் வசப்படுத்தியிருந்ததாக கூறப்படுகிறது.

இதேவேளை மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களில் நால்வர் இக் கொள்ளைக் குழுவின் தலைவர் ஜாம் சூங் என்பவரது காதலிகள் என்பது குறிப்பிடத் தக்கது. (உ)

## ஜேர்மன் ஆயுதச் சந்தையில் குண்டு வெடித்ததில் 30 பேர் பலி

(ஜேர்மன்)

நாட்டின் மத்திய பகுதியில் அமைந்த நகர மொன் றில் சக்தி மிக்க குண்டு வெடித்ததில் முப்பது பேர் இறந்ததுடன் ஐம்பதுக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

ஆயுதங்கள் விற்கப்படும் சந்தையொன்றில் இந்தச்சம்பவம் நிகழ்ந்துள்ளது

ஜெமன்நாட்டில் ஆயுதங்கள் வெளிப்படையாக விற்கப்படும் சந்தைகள் பலஇருக்கின்றன அவற்றில்ஒன்றுதான் இந்த அனர்த்தங்கள் ஏற்படுத்திய சந்தையாகும்.

அதிகார பூர்வமாக அந்த குண்டு வெடிப்புகள் பற்றி வெளியிடப்படாத போதும் உண்மையென தகவல்அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. [து]

## செய்திப்பரல்

★ காஷ்மீரில் 64 ஆவது தடவையாக யுத்த நிறுத்தத்தை நீடிப்பது தொடர்பாக இந்தியா அடுத்த சில தினங்களில் அறிவிக்கவுள்ளது.

★ ஹெட்ப்டியில் ஏற்பட்ட பெரும் வெள்ளம் காரணமாக 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

★ பிலிப்பைன்ஸின் மாயோன் எரிமலை அண்மையில் தீயைக் கக்கும் அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

★ அமெரிக்காவின், திபெத்திய விவகார விசேஷ அதிகாரியாக பவ்லா டொப்பிரியானஸ்கி நியமிக்கப்பட்டுள்ளார்.

★ கொலம்பியாவின் மெடலின் நகரத்தில் கார்க் குண்டுவெடித்ததில் 6 பேர் கொல்லப்பட்டு, 50 பேர் காயமடைந்துள்ளனர்.

(க-3)

## உலக தரிசன அறிவுப் போட்டி இல - 10

முழுப்பெயர்: ____________________

முகவரி: ______________

______________

பிறந்த திகதி: ______________

போட்டியாளர் கையொப்பம்: ______________

பெற்ற புள்ளிகள்: __________

25-05-5001க்கு முன் உலகதரிசன விடைகளை பத்திரத்துடன் அனுப்பி வைக்கவும்.

உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்
- குறள்

வலம்புரி

## மதுவும் மாணவர்களும்

யாழ்ப்பாணத்துக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம் என்ற பண்டிதமணியின் கண்ணோட்டம் இன்றுதலைகீழாகவுள்ளது

இதில் வேதனை என்னவெனில் உயர்தர வகுப்பு மாணவர்களில் கணிசமானோர் மது அருந்தப் பழகி விட்டனர் என்பதாகும். இவ்வாறு மது அருந்தும் மாணவர்களில் 90 வீதமானவர்கள் யாழ்ப்பாணத்தின்பிரபல்யமான கல்லூரிகளைச் சேர்ந்தவர்களென்பதும், உயர்தர குடும்ப வர்க்கத்தைச் சேர்ந்தவர்களௌன்பதும் திடுக்கிடும் தகவல்களாகும்.

இரவு வேளைகளில் குடித்து விட்டு வீதிகளிலும் வீடுகளிலும் கெட்ட வார்த்தைகளால்பேசுமளவிற்கு உயர்தர மாணவர்களின் ஒழுக்கம்சீர்குலைந்துள்ளதெனில் இதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பது ஆராய்வுக்குரியதாகும்.

ஆய்வின் முடிவு எதுவாக இருப்பினும் வடபுலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இயக்கங்கள் என்று தோற்றம் பெற்றனவோ அன்று முதல் பெற்றோர்கள் தம் பிள்ளைகளைக் கண்டிப்பதைக் கைவிட்டு விட்டனர்.

காரணம் தம் பிள்ளைகளைக் கண்டிப்பதால் இயக்கத்திற்குப் போய்விடுவார்களோ என்ற பயம். அன்று ஏற்பட்ட பயத்தின் அறுவடைகளையே இன்று அனுபவிக்கின்றோம்.

பாடசாலைகளில் ஒரு புறத்தில் பண்பு விருத்தி, மதிப்பீடு, செயற்றிட்டம் ஒப்படை என ஆவணப்படுத்தி அதிகாரிகளிடம் கையெழுத்து வேண்டுவதில் ஆசிரியர்கள் கண்ணும் கருத்துமாக இருக்க

மறுபுறத்தில் மதுஅருந்துதல், புகைத்தல், இளம் பெண்கள் மீதான சேட்டை என மாணவர்களின் பண்புவிருத்தி 18க்கும் அப்பால் கடந்து செல்கிறது.

இவற்றுக்குத் துணையாக தனியார் கல்விநிலையங்கள் வெவ்வேறு பாடசாலை மாணவர்களை ஒன்றிணைத்து ஓர் முறைசாராக் குழுவின் தோற்றத்திற்கு உதவுகின்றன.

இந்நிலையில் மாணவர்களின் எல்லை மீறிய போக்கை பாடசாலைகளும், கல்வித்திணைக்களங்களும் வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தால்காலப்போக்கில்பாடசாலைகளை சிறைச்சாலைகளாக மாற்றும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம்.

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்

# கல்விக் கண்காட்சி கற்போரை ஊக்கவல்லது

நேரடி வர்ணனை

**எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி**

கோப்பாய் மண் வெள்ளைச் சீருடைகளால் நிரம்பி வழிகின்றது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வளாகம் முழுவதும் பாடசாலைச் சிறார்கள் தமது எதிர்காலத்தை வளமுடன் திட்டமிடுவதற்கான அடித்தளமொன்றைக் காண அவாவுற்று தமக்குள் அடிபிடிப்படுகிறார்கள். வாகனங்களால் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை வீதி ஸ்தம்பிதம் அடைகிறது. அவர்களை ஒழுங்கு படுத்தும் முயற்சியில் ஆசிரியர்களும்கல்வியியற்கல்லூரி ஆசிரிய மாணவர்களும் மிகுந்த பிரயத்தனத்துடன் ஈடுபட்டுள்ளனர். ஒருவாறு நானும் இவர்களுச்கு கூடாக கண்காட்சியின் ஆரம்ப வளைவை நோக்கி நகர்கிறேன். ‘வலம்புரி’ குடும்ப அங்கத்தவரென என்னை இனங்காட்டியதும் முகமலர்ச்சியுடன் வரவேற்று அழைத்துச் சென்றனர். ஆசிரிய மாணவர்கள். இக்குறுகிய காலத்தில் அதாவது ஒரு வருட பூர்த்தியின் போது இவ்வளவு பிரமாண்டமான கண்காட்சி ஒன்றை இவர்களால் எப்படி நடத்த முடிந்தது? அவர்களின் உறுதியான அர்ப்பணிப்பு நிறைந்த மலைபோன்ற செயற்பாடுகளின் முன்னால் சிறு குன்று போன்று குறுகி நின்றேன்.

ஆம் மிகவும் குறுகிய காலத்தில் இக்கட்டான வளப்பற்றாக்குறை நிறைந்த இச்சூழலில் வியத்தகு முறையில் கற்பித்தல் நுட்பங்களை காட்சிப்படுத்திய யாழ் தேசியக்கல்வியியற்கல்லூரி மாணவர்கள் பாராட்டுக்குரியவர்கள். ஒவ்வொருபிரிவாககண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

### சித்திரப்பிரிவு

சித்திரப் பிரிவுக்குள் முதலில் நுழைகிறேன். தமிழரின் வாழ்வியல் அனர்த்தங்களைக் குறியீடாக மரபுசார் மற்றும் நவீன ஓவியங்கள் மூலம் காட்சிப் படுத்தி இருந்தனர். வரவேற்பே உணர்வு ரீதியாக எம் இனம் பற்றிய புதியதொரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக இருந்தது. தொலைக்காட்சியில் சிற்பங்கள், ஓவியங்கள் தொடர்பான விவரணப்படம் ஓடிக் கொண்டிருந்தது இது கல்லூரி சித்திரப் பிரிவினரால் தயாரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது உள்ளே சவக்காரம் களிமண், சிப்பி, சோகி, பொச்சு, வைக்கோல், நெல், வாழைத் தண்டு முதலிய கழிவுப் பொருட்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட அலங்காரப் பொருட்கள் கண்களைக் கவர்ந்தன. உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. ஒட்டுச்சித்திரங்கள் பல்வேறு பொருட்களால் ஆக்கப்பட்டிருந்தன. குறைந்த மாணவர்களின் மிகத் திறமையான முயற்சியைப் பலரும் பாராட்டிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

### இசைப்பிரிவு

இசைக்கருவிகளைஇசைத்து மகிழ்வித்து இசைப்பிரிவு வரவேற்றது. இசைக்கருவிகளின் படங்கள் வரையப்பட்டு அவை பற்றிய விளக்கமும் காட்டப்பட்டிருந்தது. விவசாயப் பாடல், தாலாட்டுப் பாடல், காவடிப்பாடல் என்பன தனித்தனியாக அவற்றுக்குரிய பாவத்துடன் பாடிக் காண்பிக்கப்பட்டன. சினிமா, கர்நாடக இசை ஒற்றுமையை தாள ராகங்களுக்கு ஏற்ற வகையில் விளக்கும் அமைப்புகள் விஞ்ஞான தொழில்நுட்பத்துடன் இணைத்து விளக்கப்பட்டன. இங்கு அனைவர் கருத்தையும் கவர்ந்தது ஆட்கள் அற்ற மேடையில ரோபோ ஒன்று ஆடியும் பாடியும் மகிழ்வித்த பாங்கு. இதை 21 ஆம் நூற்றாண்டு நவீன மேடை அமைப்பாக தாம் கற்பனை செய்ததாக மாணவர்கள் தெரிவித்தனர். அருகில் பாரம்பரிய மேடை அமைப்பையும் அமைத்திருந்தனர்.

### நடனப்பிரிவு

அடுத்து நடனப் பிரிவினுள் நுழைந்தோம்:- நடன வகைகள் தென்காசிய சாஸ்திரிய நடனங்கள். ஆடை ஆபரண மாதிரி அமைப்புகள், புத்தளிப்புக் கருவிகள என்பன சிறப்பான முறையில் உள்ளூர் பொருட்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தன. திறந்தவெளி அரங்கிலிருந்து மாடிக்கட்டடங்கள் வரை நடனத்துறை வளர்ச்சிப் போக்குகள் மற்றும் நவரசங்கள், பேதங்கள் ஓவியங்களின் மூலம் விளக்கம் கொடுக்கப்பட்டிருந்தன.

### கணித விஞ்ஞானம்

கணித, விஞ்ஞானப் பிரிவில் தேற்றங்களை உபகரணங்களின் மூலம் இலகுபடுத்தி விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். கணித வினோதங்கள், எண் விநோதங்கள், புதிர்கள் மாணவர்களின் சிந்தனையை விருத்தி செய்யும் விதமாக இருந்தன. கற்பித்தலை மேற்கொள்வோருக்கும் சிறந்த ஊடகமாக இக் கண்காட்சி அமைந்திருந்தது.

விஞ்ஞான பிரிவில் வினைத்திறனைத் தோற்றுவித்து செயன்முறைகள் மூலம் விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள் உயிரினம் பொறியல் குளோனிங் முறை DNA பற்றிய கருத்துகள் மாணவர்கள் இலகுவில் பாட விதானங்களை விளங்கிக் கொள்வதற்கு துணை புரிந்திருக்கும்.

பாதீனியம் பற்றிய தகவல்களையும் தெரிந்து கொண்டு சூழல் மாசடைதல் விண்வெளிக் கலன்கள் பற்றிய விரணப் படங்களையும் ரசித்த பின் தகவல்தொழில்நுட்பமும் நூலகவியலும் என்ற பகுதியில் தொடர்பாட்டின் பரிமாண வளர்ச்சி தீ மூட்டுதலில் தொடங்கி செய்மதித் தொடர்பாடல் வரை நீண்டு செல்லும் முறைகள் இன்ரநெற், ஈமெயில், ஈகொமர்ஸ் பற்றிய விளக்கங்கள் காட்டப்பட்டன கணனிப் பிரிவிலும் தமிழ் இணைய பல்கலைக் ழகத்தின் பா[illegible]கள், விளையாட்டுகள் எண் சேதி[illegible]ம் என் னநிகழ்த்திக் காட்டப்பட்டன.

### ஆரம்பப்பிரிவு

ஆரம்பப்பிரிவு சிறார்களுக்கு ஏற்ற வி[illegible]மக அமைக்கப்பட்டிருந்தது சூழலில் காணப்படும் பி[illegible]ணிகள் உலகின் பௌதிக அ[illegible]சங்கள், சரணாலயம் மாதிரிக் கிராமங்கள் சிறுவர் பூங்கா என்[illegible] [illegible] கொண்டன சிறு[illegible]ர் [illegible] சிந்தனை ஆற்றலை வளர்க்கக் கூடிய விதத்தில [illegible] வியை மேம்படுத்தல் சிறுவர்களின் ஆற்றலை தூண்டல் புதிய வி[illegible]யங்களை இலகுவாக மனதில் பதித்தல் முதலிய படி முறைளின் மூலம் கலைக் கூ[illegible] மாக ஆரம்பப்பிரிவு தி[illegible]ழ்ந்து சிறுவரின் உ[illegible]ல், உள ஆளுமை புதிய கல்விச் [illegible]செல நெறிகளோடு இணைத்து ஆரோக்கியமுள்ள சமுதாய மொன்றைத் தோற்றுவிக்கும் முயற்சியில் ஆரம்ப பிரிவினர் அயராது உழைத்தமை புலப்பட்டது.

### வேறு காட்சிகள்

இவை தவிர பனை அபிவிருத்திச்சபையாழ் மாவட்ட சித்த மருந்துகள உற்பத்தி விற்பனை வைத்திய சேவைகள் கூட்டுறவுச் சங்கம் ‘அன்னம்ஸ்’ விளையாட்டு உபகரணம் இசைக்கருவி விற்பனையகம் என்பனவும் தமது பொருட்களைக் காட்சிப்படுத்தியிருந்தன.

மொத்தமாக நோக்கின் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமையச் சிந்தித்துச் செயற்படும் நோக்கில காட்சிப் பொருட்கள் வடிவமைக்கப்பட்டிருந்தமை வரவேற்கக் கூடியதொன்றே மாணவர்கள் மாத்திரமன்றி அனைவருக்கும் பயன்தரு வி[illegible]த்தில் இக்கல்விக் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்து தென்று கூறில் அது மிகையல்ல. இந்த அரிய சந்தர்ப்பத்தை ஆசிரியர் மாணவர்கள் தக்க முறையில் பயன்படுத்தி பயன் அடைந்திருப்பர் என்பதிலும் ஐயமில்லை.

இன்றிலிருந்து எதிர்வரும் 27 ஆம் திகதி வரை இலங்கையின் தேசிய சுகாதார வாரம் நினைவு கூரப்படுவதை முன்னிட்டு

## சிறப்புக் கவிதை

## நலங்கள் காத்திடுவோம்!

● சுகமது பேண முயன்று நாமும்
சுத்தமதனைக் கைக் கொள்வோம்
இகமதில் சுகாதாரம்பேணி
இன்பமாக வாழ்ந்திடுவோம்!

● தொற்று நோயை அகற்ற இன்றே
தெளிவு தனைக் கொண்டிடுவோம்
சுற்றம் முழுதும் தூய்மை பேணி
சுகமாக வாழ்ந்திடுவோம்!

● விழிப்புணர்வை சமூகம் தனிலே
விதைக்க இன்றே முயன்றிடுவோம்
களிப்புடனே வாழ்வை அமைக்க
கனிவுடனே கைகொடுப்போம்!

கொடிய அரக்கன் எய்ட்சைக் கூட
கொடியோடு அறுக்க எழுந்திடுவோம்
மடிதனில் ஒருவருக் கொருவராய்
மகிழ்வுடன் கூடி வாழ்ந்திடுவோம்!

● உண்ணு மிடங்கள் உறங்குமிடங்கள்
உன்னதம் தனைக் காத்திடுவோம்
கண்ணும் கருத்தாய் இருந்து நாளும்
காலனவனை அழித்திடுவோம்!

● நல்ல சமூக உறவைப் பேணி
நலங்கள் தன்னைக் காத்திடுவோம்
கொல்லவரும் தொற்று நோயை
கொன்றே இன்று ஒழித்திடுவோம்!

சூரியநிலா

## புலிகள்மீதான தடைநீக்கம் த.வி. கூட்டணி நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது ஆளும் பொதுசன ஐக்கிய விடுதலைமுன்னணி விதித்துள்ள தடையை நீக்குவது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி அவசியமான நடவடிக்கையை மேற்கொள்ளும்என,

தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர் இரா: சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சம்பந்தன் மேலும்தெரிவிக்கையில்; விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி சமாதான பேச்சிற்கான சுமுகமான சூழலை அரசு உருவாக்க வேண்டும் என்றார்.

இதேவேளையில் விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கும் விடயம் பற்றி அரசு தரப்பில் சாதகமான பதில் அளிக்கப்படாததை யடுத்து நோர்வே பிரதிநிதி சோல்ஹெய்ம் தாய்நாடு திருப்பியதும் இங்கு குறிப்பிடத்தக்கது. [சமு]

### சுகாதார வாரம் இன்று ஆரம்பம்

(ஈச்சமோட்டை)

இலங்கையில் தேசிய சுகாதாரவாரம் நாடு முழுவதும் இன்று முதல் வரும் ஞாயிறு வரை சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. (உ-59

### கரப்பந்தாட்ட காட்சிப் போட்டி

[யாழ்ப்பாணம்]

கரப்பந்தாட்டக் காட்சிப் போட்டி, இன்று பி.ப. 4 30 மணிக்கு நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

நீர்வேலிஐக்கிய வி.க எதிர் யா/மாவட்ட வி.க. மோதவுள்ளன. (உ-10)

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகியதங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்
நியூ
ராதிகாஸ்
நகை மாளிகை
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1981)

# மக்களின் குறைகளைதீர்க்காவிடில் அமைச்சு பதவியைதூக்கி எறிவோம்

(யாழ்ப்பாணம்)
தமிழ்பேசும் மக்களின்பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றைத்தீர்த்து வைக்க எம்மால் முடியாதுவிட்டால், அமைச்சுப்பதவிகளை தூக்கிஎறிவதற்கு தாம் தயாராக உள்ளோம் என்று ஈ. பி. டி. பி. அமைப்பைச் சேர்ந்தபாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே சிவதாசன் எம். பி. மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் இக் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலின் போது நேற்றும், நேற்றுமுன் தினமும் இடம்பெற்ற மக்களின் குறைகேள் நிவர்த்தி சேவையில் நடைமுறைப் படுத்தப்பட்ட விடயங்களை எஸ். தவராசா எம். பி. பட்டியலிட்டுக் காட்டினார்.

இக்கருத்தரங்கில் எஸ் சிவதாசன் எம். பி, மேலும் தெரிவிக்கையில்கூறியதாவது

மக்களின் அன்றாடப்பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கப் படக்கூடிய அடுத்தகுறைகேள் சேவைவிரைவில் இடம் பெறவுள்ளதாகவும் கடந்த இருதினங்களாக நடைபெற்ற மக்கள்குறைகேள் நிவர்த்தி சேவை வெற்றியளித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ. 15

C D மூலம்
புதிய, பழைய பாடல்கள்,
பக்திப் பாடல்கள்
பதிவுசெய்து கொள்ள
மிலேனியம்
ஓடியோ
வீடியோ
சென்ரர்
238, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
(கி-1982)
T. P. 3646

## உள்ளூராட்சிதேர்தல்
# தெரிவுகுழுவுடனான பிரேரணையை முஸ்லிம் காங்கிரஸ் ஆதரிக்காது!

(கொழும்பு)
உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக ஆராயநிய மிக்கப்படவுள்ள தெரிவுக்குழுவின் பிரேரணைக்கு ஆதரவு வழங்குவதில்லை யென்று முஸ்லிம்காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அரசுக்குஅறிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலை விகிதாசார முறையிலா அல்லது தொகுதிவாரியாகவா நடத்துவதென்பது குறித்து தீர்மானிக்க அரசு குழுவொன்றை நியமிக்கவுள்ளது. இத் தெரிவுக்குழுவுக்கான பிரேரணை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதற்குரிய ஆதரவை முஸ்லிம் காங்கிரஸ் வழங்காதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாவனல்ல சம்பவ சூத்திரதாரியெனக் சந்தேகிக்கப்படும் அமைச்சர் மகியபாலஹேரத்துக்கு எதிராக ஐக்கிதேசியக்கட்சி கொண்டுவரவிருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவுவழங்குவது பற்றி பிரேரணை சமர்ப்பிக்கப்படும் போது தீர்மானிப்பதென வும்கட்சி முடிவுசெய்துள்ளது. (இ)

### தம்மீதான ...

பூகும சமகௌரவம் இருக்கவேண்டியது சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை.

இந்தவகையில் விடுதலைப் புலிகள் மீது விடுக்கப்பட்டுள்ள தடை சமாதானப் பேச்சுக்கு முன்னர் நீக்கப்படுவது அத்தியவசியமானதொரு விடயமென்று அவ்வமைப்பு வட்டாரங்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன.

அரசாங்கமதென்னிலங்கை மக்களின் மனம் புண்படாத வகையில்செயற்படவே விரும்புகிறது. இந்நிலையில் அம்மக்கள் சமாதானப் பேச்சுக்குளை விரும்பாத போது அதனை முறித்துவிட்டு தடைசெய்யப்பட்ட அமைப்புடன் எப்படிப் பேச்சில் ஈடுபடுவதெனவினா எழுப்பவும் முடியும்.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் தம்மீதான தடையை நீக்குமாறு கோருவது நியாயமானதென அமைப்புகளும் அரசியல் அவதானிகளும் மேலும் கருத்து வெளியிட்டுள்ளனர். (இ)

### ஐக்கிய தேசியக் ...

பேச்சுக்கள் முறிவடையும்.

இந்நிலையில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில விடுதலைப புலிகள் ஐக்கிய தேசியக கட்சியின் அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைககு ஆதரவு வழங்குவார்களென அச்செய்தி ஊடகம் மேலும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய தேசியககட்சியால் கொண்டு வரப் படவுள்ள அரசு மீதான நம்பிக்கையிலலாப் பிரேரணைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவு வழங்க வேண்டிய நிலையில் இருப்பதாக 'இந்துஸ்தான் ரைம்ஸ் செய்தியாளர்' தெரிவித்துள்ளார்.

அரசு மீது ஐக்கியதேசியக் கட்சி கொடுத்துவரும் அழுத்தம் மற்றும் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப் பட்டுள்ள கோரிக்கைகள் ஆகியன அரசை ஆட்டம்காண வைத்துள்ளதாகவும், இதனால் அரசு புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளைப் பகுதியளவிலாவது நிறைவேற்ற வேண்டிய நிலையில் உள்ளதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (இ)

### சமாதானம் ---

டில் சமாதானம் ஏற்படும் வரை படையினர் நாட்டுக்கு உதவியாக இருக்கவேண்டும். போர்க்களத்தில் போரிடும் படையினருக்கு வர்த்தகர்கள் உட்பட சகலரும் உதவவேண்டும் என்றும் படையினருக்கு ஒத்துழைப்பும் ஊக்குவிப்பு வழங்கவேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

ஐக்கிய தேசியக்கட்சி கொண்டுவர உத்தேசித்துள்ள நம்பிக்கை இல்லாப் பிரேரணை மூலம் அரசாங்கத்தைக் கவிழ்க்கமுடியாதென்றும் பிரதமர் அங்கு தெரிவித்துள்ளார்.

இவ்வைபவத்தில் அமைச்சர் ஜி. எல். பீரிஸ், இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் லயனல் பலகல்ல ஆகியோர் கலந்து கொண்டனர். (வ

### ஜனாதிபதி

தமிழர்விடுதலைக்கூட்டணி எம் பிக்கள், அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் எம்·பி மற்றுமமுஸ்லிம் காங்கிரஸ் இ·தொ.க.எம்·பிக்களின் ஆதரவைப்பொறுத்து நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் அரசைக்கவிழ்க்க ஐக்கியதேசியக்கட்சி முயற்சித்து வருகிறது.

இம்முயற்சியிலிருந்து அரசு தன்னைப்பாதுகாத்துக் கொள்வதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுத்தே ஆகவேண்டுமென்ற நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளது

இதனால் அரசு விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளது என்றும் தடை நீக்கப்பட்டாலே ஒழிய பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு எந்த விதமான வழியும் அரசுக்கு இல்லை என்றும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கவும், நம்பிக்கையில்லாப்பிரேரணையை தோற்கடிக்கவும் ஜனாதிபதி இந்த உயர்மட்ட மாநாட்டைக் கூட்டியிருந்தார் என அரசியல் ஆய்வாளர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவும் ஜனாதிபதியின்அவசரஅழைப்பின் பேரில் நேற்று நண்பகல்கொழும்புசென்றார். (வ

### வன்னிக்கு உணவு

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப்பிரதேசத்திற்கு கடந்த ஒருவாரகாலத்தில் சுமார் 46 லொறிகளில் உணவுப்பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது!

### புளொட்

டுச்சம்பவத்தில் புளொட் அமைப்பைச் சேர்ந்த காண்டீபன் (வயது 26), பத்மநாதன் (வயது 28) ஆகியோரே வாள்வெட்டுக்கு இலக்கானவர்களாவர்.

இந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் ரெலோ அமைப்பைச் சேர்ந்தவர்களே ஈடுபட்டிருந்தனர் என புளொட் அமைப்பின் வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் கணேசலிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை புளொட் அமைப்பின் இக் குற்றச்சாட்டை ரெலோவின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மறுத்துள்ளதுடன் இச்சம்பவத்திற்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முதலியார் குளம் பகுதியில் சிப்பு வடித்தோரைப் பிடிக்கச் சென்றபோதே இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றதாக மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது (ம)

### சமாதானத்தை --

தார். அவர்தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்:

நாம் சமாதானத்தை அடையும் சரியான பாதையில் சென்றுகொண்டிருக்கின்றோம். யுத்தத்தால் இலங்கையர்கள் அனைவருமே களைப்படைந்து விட்டனர்.

சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராகக்குரல் கொடுக்கும்பௌத்தபிக்குகள் பலர் நாட்டில் உள்ளனர். அவர்களுக்கு அகிம்சை வழி தெரியாது. அவர்களை சமுதாயத்திலிருந்து நிராகரிக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
எம். ஜி. ஆர், சரோஜாதேவி
நம்பியார்
நடித்த
எங்கவீட்டுப்
பிள்ளை
11-00, 2-30 பு. நே:
சனி ஞாயிறு பி. ப 6 மணி
(ரீல்ஸ்) (கி-1977)

### மட்டக்களப்பு சுற்றிவளைப்பு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு கல்முனைப் பிரதான வீதியிலுள்ள புதுக்குடியிருப்பு கிராமம் நேற்று அதிகாலை விசேட அதிரடிப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு வீடுவீடாக தேடுதல் நடத்தப் பட்டுள்ளது. (இ)

## நீர்கொழும்புச் சிறையில்
# வெளிநாட்டுக் கைதிகள் 20பேர் உண்ணா விரதம்

நீர்கொழும்புச்சிறைச்சாலையில் தடுத்துவைக்கப் பட்டுள்ள வெளிநாட்டுக் கைதிகள் 20பேர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள்தம்மீதான விசாரணைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டும். அல்லது தாம்விடுதலை செய்யப்படவேண்டும் என்றும்கோரிக்கை விடுத்தனர்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் விசாமுடிந்தவர்கள் மற்றும் கடவுச்சீட்டுபிரச்சினை காரணமாக கைது செய்யப்பட்டவர்கள் எனநீர்கொழும்புச்சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலையில் உள்ள அனைவரும் கொரியா பிரிட்டன் அமெரிக்கா மற்றும் சீனாஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பதும்குறிப்பிடத்தக்கது. (ந. 5)

## லண்டனில்
# புலிகளுக்குஎதிராக சிஹல உறுமய ஆர்ப்பாட்டம்

விடுதலைப் புலிகளுக் கெதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை சிஹலஉறுமயக்கட்சி நேற்றுமுன்தினம் லண்டனில் நடாத்தியுள்ளது.

லண்டனில் இடம் பெற்ற புலிகளுக் கெதிரான முதலாவது ஆர்ப்பாட்ட ஊர்வலம் இதுவாகும்.

அரசு, விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்டு வரும் சமாதானப் பேச்சுவார்த்தையைக்கண்டித்தே இந்தஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப் பட்டுள்ளது. நூற்றுக்குமதிகமானோர் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் லண்டனில்உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன்னால் இடம் பெற்றது.

லண்டனில் உள்ள சிஹல உறுமயவின் தலைமைக்காரியலயம் இதனைஏற்பாடுசெய்திருந்தது. (வ)

## எதிர்ப்பின் மத்தியில்
# அவுஸ்ரேலிய தூதுவராக ஜானக பெரேரா

(கொழும்பு)
மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா அவுஸ்திரேலிய தூதுவராக நியமனம் பெறவுள்ளார்.

இவரது இந்த நியமனம் கடந்த இரு மாதங்களுக்கு முன்பு இடம் பெற்றிருந்த போதும் இவரதுநியமனத்தை அவுஸ்திரேலியா ஏற்காமையினால் நியமனம் இழுபறி நிலை இருந்தது.

இவரதுநியமனத்தை அவுஸ்திரேலியா அமைப்புகள் சர்வதேச மன்னிப்புச்சபை என்பன எதிர்த்திருந்தன.

இதனைத்தொடர்ந்து வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சருடன் தொடர்பு கொண்டதை அடுத்து மேஜர் ஜெனரல் ஜானகபெரேரா தூதுவராக நியமனம் பெறவுள்ளார். (வ

### ஜனாதிபதி ---

பயணமானார்.

மக்கள் குறை நிவர்த்தி சேவையில் கலந்து கொண்டிருந்த சமயம் உடனடியாக அமைச்சர் கொழும்பு பயணமானாலும் இன்றுகாலை அமைச்சருடனான அதிகாரிகளுக்கான சந்திப்பு வழமை போன்று இடம் பெறவுள்ளது.

இதேவேளை மக்கள் குறை நிவர்த்தி சேவையில் அமைச்சரை சந்திக்கமுடியாத மக்கள் எதிர்வரும் புதன் கிழமை முதல் சனிக்கிழமை வரை சந்திக்கலாம் என பா.உ. எஸ் தவராஜா தெரிவித்தார்: [வ-15]

### குடும்பநல ...

இவ்வேண்டுகோளில்கடந்த காலங்களில் நிகழ்ந்த சம்பவங்கள் விளக்கிக் கூறப் பட்டுள்ளதுடன்.

சுமுகமான ஓர் நிலையை ஏற்படுத்தினால் தாமும்வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரனும் சுகாதார சேவையை திறம்பட வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது:

இதேவேளை இன்று கூடவுள்ள யாழ் மாநகரசபையின் பொதுக் கூட்டத்தில் சுமுகமான ஓர் தீர்வு எட்டப்படுமென நம்பப்படுகிறது: (ந)

இப்பத்திரிகை "வலம்புரி" அல்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு மே மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.